
*தேதி : 03. 04. 2020*



# ஏப்ரல் மாத சுற்றுமடல் 2020

**கிறிஸ்துவில் அன்புள்ள அருட்சகோதரிகளே!**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! வணக்கங்கள்!**



இறையருளை நாடி இறைவல்லமையைப் பெற்றுக்கொள்ள இறைவனே இன்முகத்தோடு நமக்கு பரிசாகத்தரும் இரக்கத்தின் காலம் தவக்காலம். இந்த தவக்காலத்தில் நாம் முழுமையாக இறைவனிடம் சரணடைய வாய்ப்புள்ள இக்கொரோனா காலத்தில் இந்த சுற்றுமடல் வழியாக உங்களை ஆறுதல்படுத்துவதில் மனம் மகிழ்கின்றேன்.

*ஓடிக்கொண்டிருப்பவனே! நில்,*
*எங்கே ஓடுகிறாய்? எதற்காக ஓடுகிறாய்?*
*வாழ்க்கையைப் பிடிக்க ஓடினாய்! ஆனால் உன் கண்மூடிய*
*ஓட்டத்தில் அதைப் பார்க்காமலே ஓடுகிறாய்.*
*நில் கவனி..... உன்னிலிருந்து ஓடு! உன்னைவிட்டு ஓடு!*
*இவ்வுலகில் எதை எதையோ தேடிக்கொண்டிருக்கும்*
*உன் ஓட்டத்தை நிறுத்தி விடு. இல்லையென்றால் இயற்கை உன் ஓட்டத்தை நிறுத்திவிடும் – அப்துல் ரகுமான்.* ஆம்! எனதன்பின் சகோதரிகளே! எதை எதையோ தேடி அலைபாய்ந்துக் கொண்டிருந்த இந்த உலகத்தின் ஓட்டத்தை, இயக்கத்தை கொரோனா வைரஸ் தடுத்து நிறுத்தி நம்மை தனித் தீவுகளாக மாற்றிவிட்டது. ஆலயங்கள் மூடப்பட்டுள்ளன. கோவில்களில் வழிபாடுகள் இல்லை. மசூதிகளில் ஓதுதல் இல்லை. ஆலயத்தில் கடவுளை காண முடியாமல் நாம் தனிமைப்படுத்தப்பட்டிருகின்றோம். உலகத்தில் இறப்புகளின் எண்ணிக்கையும் கொரோனா வைரஸ் பரவுதலும் அதிகமாவதால் நாம் அச்சத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம். கொரோனா வைரஸ் பாதிப்பால் நம் வீடுகள் பூட்டி இருக்கலாம். ஆலயங்கள் மூடியிருக்கலாம். ஆனால் நமது ஆன்ம ஜன்னல்களை ஆண்டவருக்காக திறக்க அருமையான நேரம்."சமூக இடைவெளி" (Social Distance) நடைமுறையில் உள்ள இக்காலக் கட்டத்தில் சமூக இடைவெளியை அதிகப்படுத்தி இறைவனிடம் உள்ள இடைவெளியை குறைத்து இன்னும் அதிகமாய் அவரைத் தேடுவோம். உலகத்தில் நடனமாடி ஒரு நிமிடத்தில் நின்றுவிட்டது பம்பரம். இந்த பம்பரம் போன்றதுதான் வாழ்க்கை. ஒரு நிமிடத்தில் நின்றுவிடக்கூடிய வாழ்க்கையை அலசிப்பார்த்து, சுய ஆய்வு செய்து சரியான முறையில் வாழ்ந்திட இறைவன் அமைத்து தந்த உண்மையான தவக்காலம் இக்காலம் என கருதுகின்றேன். வாடிக்கையாக செபம் சொல்லி வாழ்க்கையில் மாற்றம் இல்லாமல் போன எத்தனையோ தவக்காலம் நம் வாழ்வில் வந்து போயிருக்கலாம். ஆனால் இந்த தவக்காலத்தில் வழக்கமான திருவழிபாடுகளில் பங்கேற்க வாய்ப்பில்லை. இருப்பினும் இறைவனின் பாடுகளோடு பங்கேற்க நம்மை தனிமைப்படுத்திக்கொள்வோம்.

உலகை வெல்லவும் உன்னையே நீ வெல்லவும் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று சுய விமர்சனம். மற்றொன்று சுய தரிசனம். - ஊதாரி மைந்தன் தன் வாழ்வை சுய ஆய்வுக்கு உட்படுத்தி தந்தையை

நோக்கி சென்றதுபோல நாமும் நம் வாழ்வை சுய ஆய்வுக்கு உட்படுத்தி தந்தையிடம் திரும்பி செல்ல இந்நாட்களை பயன்படுத்துவோம்.

எசாயா 26: 20 - ***என் மக்களே! நீங்கள் போய் உங்கள் அறைக்குள் நுழைந்து, உள்ளிருந்து கதவுகளைத் தாழிட்டுக் கொள்ளுங்கள். கடும் சினம் தணியும்வரை சற்று ஒளிந்து கொள்ளுங்கள்.***

என்ற இறைவார்த்தைப்படி, இறைவனின் சினம் தணியும் வரை அவரோடிருந்து, அவர் எனக்கு என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை அறிவோம்.

தானியேல் 10 :8 – ***தனித்து விடப்பட்ட நான் மட்டும் இப்பெரும் காட்சியைக் கண்டேன். நான் வலுவிழந்து போனேன். என் முகத்தோற்றம் சாவுக்கு உள்ளானவனைப்போல் வெளிறியது......***

ஆண்டவரின் காட்சியை காணுமளவுக்கு தானியேல் இறைவனோடு ஒன்றித்திருந்தார். தானியேல் தனித்துவிடப்பட்டதால் தான் யார் என்பதை கண்டு கொள்கிறார். ஆண்டவரோடு தனித்து இருப்போம். தனித்து இருக்கும் போது நாம் இறைவனின் முகத்தை காண்போம். நாம் யார் என்பதையும் கண்டுகொள்வோம். அப்போது நாம் ஆற்றல் பெற்றவர்களாக மாறுவோம்.

**மத்தேயு 24:3 – இயேசு அமர்ந்திருந்தபோது சீடர்கள் அவரிடம் தனியாக வந்து “நீர் கூறியவை எப்போது நிகழும்? உமது வருகைக்கும் உலக முடிவுக்கும் அறிகுறி என்ன என்று எங்களுக்குச் சொல்லும் என இயேசுவிடம் கற்றுத் தரக்கேட்கின்றனர்.**

ஆண்டவரோடு தனித்திருந்து ஆண்டவர் என்ன சொல்ல விரும்புகின்றார் என்பதை புரிந்து கொள்வோம். நான், எனது, என் பணிகள் என எல்லாவற்றையும் கடந்து ஆண்டவரோடு தனித்து இருந்து அவரிடம் கற்றுக் கொள்வோம். அலைபேசி, Whattsapp, Friends என அனைத்தையும் ஒதுக்கிவிட்டு ஆண்டவரோடு ஒன்றித்திருப்போம்.

லூக்கா 9:18 – ல் இயேசு தனித்து இறைவனிடம் வேண்டும் போது சீடர்களும் இயேசுவோடு தனித்து இருந்து ஆண்டவர் வாழும் கடவுளின் மகன் என்பதை கண்டு கொள்கின்றார்கள். நாமும் தனித்து ஆண்டவரோடு இருப்போம். அப்போது நாம் யார் என்று பிறர் கண்டுகொள்வார்கள்.

***எசாயா :40:31 : ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர். அவர்கள் ஓடுவர். களைப்படையார். நடந்து செல்வர். சோர்வடையார்.***

கடவுளை முழுமையாக நம்புகிறவர்கள் ஆற்றல் பெறுவர். கழுகுகள் போல் செபத்தில் உயர்வடைவர். சக்தி வாய்ந்தவர்களாக இறை உறவில் நிலைப்பர். அவர்களுக்கு களைப்பு, சோர்வு என்பது இராது. இவ்வாறு தனித்து இறைவனிடம் செபிக்கும்போது நம்மை நாமே முழுமையாக அறிந்து கொள்ள இறைவன் வழிகாட்டுவார். நம் குறைபாடுகளை களைந்து, இறை உறவில், இறையன்பில், இறையனுபவத்தில் திளைக்க இறைவன் அருள் கூர்வார்.

இந்த நாட்கள் விடுமுறை அல்ல. வாழ்க்கை முறை. நம் வாழ்க்கையை புதிதாய் மாற்றிக் கொள்ள இந்த நாட்களை பயன்படுத்துவோம்.





ஆண்டவரோடு இணைந்து நம் வாழ்வுக்கான சக்தியை பெறுவோம். இறைவனிடமிருந்து பெற்ற வல்லமையால் நம்மையும் “கொடிய கிருமியால் அழிந்து கொண்டிருக்கும் இப்பூமியையும் பாதுகாப்போம். இதோ அனைத்தையும் புதியன ஆக்குகின்றேன் என்ற இறைவார்த்தைக்கேற்ப இந்த தனிமை நம்மையும் இந்த உலகத்தையும் புதியதாய் மாற்றட்டும்.

***உடல் உங்களைத் துறக்குமுன் நீங்கள் அனைத்தையும் துறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் - ரவிச்சந்திரர்.*** நம்மிடம் மாற்றக்கூடிய, களையப்பட வேண்டிய குணநலன்களை விடுத்து புதிய மனிதர்களாக உருப்பெற முயற்சிப்போம். காலை முதல் மாலை வரை TV, Youtube, Whattsapp மூலம் கொரோனா பற்றிய செய்திகளையும் வதந்திகளையும் வாசித்து அச்சத்தோடும் கலக்கத்தோடும் வாழாமல் இறைவார்த்தையை வாசித்து, இறை உறவில் நம்மையே ஆழப்படுத்தி இந்த கொரோனா பூமியை அருளின் பூமியாக மாற்றி அமைக்க செபிப்போம்.

தாவீது அரசர் தன் மக்கள் கொள்ளை நோயினால் வீழ்ந்த போது இறைவனை நோக்கி மன்றாடியதைப் போல நாமும் இறைவனை நோக்கி மன்றாடுவோம். மெய்யாகவே! அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார் என்று எசாயா இறைவாக்கினர் கூறுவது போல ஆண்டவர் நம் உலகத்தின் பிணிகளை தாங்கிக் கொள்ள உருக்கமாக இந்நாட்களில் செபிப்போம்.

இக்காலக் கட்டங்களில் அரசு மற்றும் திருச்சபை தருகின்ற சட்டதிட்டங்களை முழுமையாக பின்பற்றுவோம். இந்த நாட்களில் அதிகமாக நோய் எதிர்ப்பு சக்தி தேவை. நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க நல்ல எண்ணம், நேர்மறையான சிந்தனை, தூய்மையான செபம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என ஒரு ஆய்வு கூறுகின்றது. ஆகவே புனித வார நாட்களில் நம்மை முழுமையாக புனிதப்படுத்திக் கொள்வோம். உறுதிப்படுத்திக் கொள்வோம்.

சிலுவையின் வழியே மீட்பு என்ற பவுல் அடியாரைப்போன்று இத்துன்பமாகிய கொரோனா சிலுவையிலிருந்து நாம் மீட்பு பெறுவோம் என நம்புவோம். ***"உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்". (யோவான் 16: 36)*** என்ற உயிர்த்த ஆண்டவரின் கூற்று இந்நாட்களில் நம்மைத் தேற்றி வழிநடத்தட்டும். ஆண்டவர் சாவிலிருந்து விடுதலை பெற்று உயிர்த்தெழுந்ததுப்போல இந்த கொடிய வைரஸிலிருந்து உயிர்த்தெழ அனுதினமும் மன்றாடுவோம்.



இந்த நாட்களில் முழுமையாக இறைவனோடு இணைந்து……..

**நமது சோகமான மனநிலையிலிருந்து உயிர்தெழுவோம்**

**நமது வீண் கவலைகளிலிருந்து உயிர்த்தெழுவோம்.**

**நமது மன அழுத்தங்களிலிருந்து உயிர்த்தெழுவோம்.**

**நமது மன கசப்புகளிலிருந்து உயித்தெழுவோம்**

**நமது உலகு சார்ந்த அடிமைத்தன வாழ்க்கையிலிருந்து {ஊடக அடிமைத்தனத்திலிருந்து} உயிர்த்தெழுவோம்.**

**கொரோனா வைரஸ் அச்சத்திலிருந்து உயிர்த்தெழுவோம்.**

**அனைவருக்கும் உயிர்த்த இயேசுவின் பெருவிழா வாழ்த்துக்கள்!**

**அல்லேலூயா! அல்லேலூயா!**

**கிறிஸ்துவில் அன்புள்ள,**

**(சகோ. அல்போன்ஸ் பாத்திமா)**


சகோதரிகளை
வாழ்த்துவோம்!!
சகோ.ராஜாத்தி M
ஏப்ரல் 18{பி}
சகோ. லீலா பிலோமின்
ஏப்ரல் 22 {பி}
சகோ. மரிய ஜெர்லின் பிரீடா
ஏப்ரல் 29 {பி}